1973 நவம்பர் 21]

திரு. வீ. செல்லதுரை : மின்சாரத்தினால் கிராமப்புறங்களில் உள்ள பறி தைக்கும் அரிசனங்கள் வெகுவாக பாதிக்கப் பட்டுள்ளார்கள். அதைப்போல் நாட்டில் ஹிப்பிஸம் வளர்ந்து கொண்டே போவதால் க்ஷவரத் தொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, அவர்களுக்கு அந்தப் பகுதி களில் உள்ள தரிசு நிலங்களை விவசாயம் செய்யப் பகிர்ந்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி எவ்வளவு நிலங்கள் இருக் கின்றன என்பது. அதிலே 400 ஏக்கரா நிலம் ஒப்படை செய்ய லாம், 400 ஏக்கரா செய்ய முடியாது. அந்த 400 ஏக்கரா நிலங்கள் ஏற்கனவே சிவாஜிமா ஆகுபேஷனில் இருந்து வருகிறது. ஸ்தல அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள்.

*277 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

பென்னலூர்ப்பேட்டை துணை வட்டம், திருக்கண்டலம் கிராமத்தில் உள்ள 'முள்தோப்பு' புறம்போக்கு நிலத்தை வீடற்ற அரிசன மக்களுக்கு ஒப்படை செய்வதில் ஏற்படும் காலதாமதத் திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பென்னலூர்ப் பேட்டை துணை வட்டம், திருக்கண்டலம் கிராமம் "முள் தோப்பு புறம்போக்கு", என்பது 'சித்தேரி வரவுகால் புறம்போக்கு' என்று வருவாய்த்துறை கணக்குகளில் உள்ளது. இந்த நிலத்தை ஒப்படை செய்வது நீர்ப்பாசன வசதிக்கு மிகவும் இடையூறாக இருக்கும் என்ற காரணத்தால் இதை ஒப்படை செய்ய இயலாது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, மேற்கண்ட நிலத்தை இரண்டு மூன்று பணக்காரர்கள் சாகுபடி செய்யும் நிலங்களாக பயன் படுத்திக்கொண்டிருக்கிறார்கள். வீட்டு மனைக் குரிய நிலம் வேறு இல்லை. ஆகவே, ஒரு சிறப்பு நடவடிக்கையாக கலெக்டருக்கு உத்தரவிட்டு வீட்டு மனை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வீட்டுப் பட்டாவுக்கு தகுதியானவை அல்ல என்பது தான் குறிப்பு. சித்தேரி புறம்போக்கு நிலமாக இருப்பதன் காரணத்தினால் கிராம மக்கள் ஆட்சேபனை செய்கிறார்கள். வீட்டு மனைக்காக பக்கத்தில் மடவிளாகம் என்ற ஊரில் நிறைய இடம் இருக்கிறது. 100 பேர்களுக்கு இடம் கொடுக்கலாம். அவர்கள் ஒப்புக் கொண்டால் அங்கே கொடுப்பதற்கு ஆட்சேபனை கிடையாது.

ஓய்வு பெற்ற இராணுவத்தினருக்கு நிலம் ஒதுக்கீடு

*** 278 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம் கிடைக்கும் உபரி நிலங்களை ஓய்வு பெற்ற இராணுவத்தினருக்கும் ஒதுக்கித் தருமாறு மாநில அரசை மத்திய அரசு கோரியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது மாநில அரசு என்ன முடிவு எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: உச்சவரம்பிலிருந்து மிச்சம் ஏற்படும் நிலத்தை இலங்கையிலிருந்து வருகிற அகதிகளுக்கு முன்உரிமை கொடுத்து ஒதுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்பொழுது இருக்கிற விதிமுறைகளின்படி சில பேர்களுக்கு முன் உரிமை வழங்கப்படுகிறது. எட்டாவது இடத்தில் தாமே நேரடியாகவோ அல்லது தமது குடும்பத்திலுள்ள ஒருவர் மூலமோ உழவுத் தொழிலில் ஈடுபடக்கூடியவராகவும், ரூ. 10,000-க்கு மேற்படாது மதிப்புள்ள சொத்துக்களை இந்தியாவுக்குக் கொண்டுவந்துள்ள வருமான இலங்கை அகதிகளுக்குக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. விதிமுறைகளின்படி முன் உரிமை வழங்கப்பட்டு ஒதுக்கப்பட்டுவருகிறது.